# இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1. இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் இல. 01 மற்றும் 03 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான வருமானத்தை இனங்காணல் கொள்கை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் குறுங்காலப் பாடநெறிகள் மற்றும் ஏனைய அடிப்படை வருமானங்களை இனங்காணும் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் இல. 01 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகையில் வருமானமும் செலவினமும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படலாகாத போதிலும் பல்கலைக்கழகம் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களில் குறுங்காலப் பாடநெறிகளின் வருமானமும் செலவினங்களும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பல்கலைக்கழகத்தில் குறுங்கால மற்றும் ஏனைய அடிப்படை வருமான மூலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானமும் இதற்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களும் அரச துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கீடு நியமங்களின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பல்கலைக்கழக உள்ளகக் குழுவாகச் செயற்படும் ஆலோசனை மற்றும் வெளியக வள நிலையத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அது தீர்மானத்தின் பிரகாரம் கணக்கிடப்பட்டிருந்தமை வெளியாகியது. இக் குழுவின் தீர்மானம் பெறப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது கிடைக்கப்பெற்ற குறுங்காலப் பாடநெறி மற்றும் ஏனைய மூலாதார வருமானப் பெறுவனவுகள் மற்றும் அவற்றிற்கான செலவினங்கள் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வருமானம் மற்றும் செலவினமாக இனங்காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருதம் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வவுனியா மற்றும் கம்பஹா கல்வி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி ரூபா 585,500 ஆல் கூடுதலாக மீள்பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழக பிராந்திய அலுவலகங்கள் மற்றும் கல்வி நிலையங்கள் இயங்கிவரும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமை பல்கலைக்கழகத்திற்கு சட்டரீதியாக ஒப்படைக்கப்படாத ரூபா 13,792,455 பெறுமதியான காணிகளும் கட்டிடங்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) 2012 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுத் திணைக்களத்தின் இடைக்கால அறிக்கையின் படி காணிகளின் பெறுமதி ரூபா 193,888,000 ஆல் குறைக்கப்பட வேண்டும் எனவும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 53,905,317 ஆல் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் நிதிக்கூற்றுக்களின்

குறிப்புகளின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும், சொத்துக்களின் மீள்பெறுமதியீட்டுச் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு மதிப்பீட்டுத் திணைக்களத்தால் முழுமையான அறிக்கை 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட சொத்துக்கள், திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் மீள்பெறுமதியீட்டு ஒதுக்கம் போன்ற மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஈ) தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்ட உதவியாக 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 1,896.5 மில்லியன் பெறுமதியான வாகனங்கள், தளபாடங்கள், இயந்திர உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அலுவலக உபகரணங்கள் இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் பெறுமதி ரூபா 663.5 மில்லியன் தொகையால் குறைவாகவும் வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் ரூபா 144 மில்லியனால் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற பொருட்களின் அளவு இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படாது நிலையான சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வு குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) பல்கலைக்கழகத்தின் நாவல பிரதான வளாகத்திலும் பிராந்திய கல்வி நிலையங்களிலும் ரூபா 971.9 மில்லியன் பெறுமதியான நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது ரூபா 903.8 மில்லியன் தொகையாக ரூபா 68.1 மில்லியன் தொகை குறைவாகவும் அதற்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 12.4 மில்லியன் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிர்மாணிப்புகள் பூர்த்தியாகிய ஆண்டு சரியாக நிச்சயிக்கப்பட்டிராமையாலும் தாமதிப்புத் தண்டப்பணம் கருத்திற்கொள்ளப்பட்டிராமையால் ஏற்பட்ட தவறான கணிப்பீடுகள் காரணமாக திரண்ட பெறுமானத்தேய்வின் அளவு ரூபா 26.9 மில்லியன் தொகையால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பல்கலைக்கழகத்தின் பாடநெறிக் கட்டணம் உள்ளடங்கலாக ஏனைய கட்டணங்களுக்காக மாணவர்களால் பல்கலைக்கழக சேகரிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட பணம் நாளாந்தம் இனங்காணப்பட்டு பதியப்பட்டிராமையால் பல வருட காலமாக நிலவிவரும் ரூபா 10,284,621 தொகையான மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் இனங்காணப்படாத பெறுவனவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) கட்டுப்பாட்டுச் சபையால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனை மற்றும் வெளி வள நிலையம் எனும் பெயரிலான குழுவின் (CERC) அங்கீகாரத்தின் கீழான வருமான மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பண வருமானம் உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட அச் சந்தர்ப்பங்களின் போதே வருமானம் இனங்காணப்படாது பல வருட காலத்தின் பின்னர் வருமானம் இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 8 சந்தர்ப்பங்களின் போது வருமானம் ரூபா 12,691,683 ஆகவும் அதற்குரிய செலவினம் ரூபா 6,787,295 தொகையாகவும் 2012 திசெம்பர் 31 வரை பல்கலைக்கழக வருமானச் செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 99 (ஈ) பிரிவின் பிரகாரம் உயர் கல்வி நிறுவகத்திற்குச் சொந்தமான போதிலும் எந்த மூலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் ஏனைய அனைத்துப் பணமும் பல்கலைக்கழக நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்படாத குறுங்காலப் பாடநெறிகள் மற்றும் ஏனைய 03 வருமான மூலங்களுக்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 4,966,250 தொகை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றில் தவறாக நிதியமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகச் செயற்பாட்டிற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நானாவித முற்பணங்கள் மற்றும் வழங்கல் முற்பணங்களிலிருந்து தீர்க்கப்படாத மீதி ரூபா 1,156,678 ஆனதுடன் இதில் ரூபா 159,430 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியாகக் காணப்பட்டது. இம் முற்பணங்கள் முற்பணத்தைப்

பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் நிறுவகத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) திறந்த பல்கலைக்கழகத்திற்கு வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய விசேட செயற்திட்டங்களுக்குமாகக் கிடைக்கப்பெற்ற பணத்திற்குரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு எஞ்சிய ரூபா 12,703,904 தொகையான மீதி மீளச் செலுத்தப்படாது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட நிதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அம் மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக பிடித்துவைக்கப்பட்டிருந்த ரூபா 4,643,856 தொகையும் காணப்பட்டது.

(ஓ) வரையறுக்கப்பட்ட நிதிய மீதியில் நானாவித நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த 44 நிதி மூலங்களின் ரூபா 19,123,144 கூட்டுத்தொகை 2012 ஆம் ஆண்டின் போது கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் ரூபா 10,572,256 கூட்டுத்தொகையான 21 நிதியங்கள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது. மேலும், ரூபா 4,688,565 கூட்டுத்தொகையான 13 நிதியங்கள் 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஔ) குறுங்காலப் பாடநெறி வருமானமாகக் கருதி பட்டம் மற்றும் பட்டப்பின்படிப்பு நிலையிலான 04 பாடநெறிகளுக்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 17,312,154 தொகையான வருமானமும் ரூபா 13,702,714 தொகையான செலவினமும் நிதிக் கூற்றுக்களின் மூலம் வருமானச் செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. இனங்காணப்படாத பாடநெறிக் கட்டணப் பெறுவனவுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2012 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கையை மீறிய கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரிடமிருந்து அறவிடப்பட்டிருந்த பணம் ரூபா 12,075,117

ஆன போதிலும் தாபனப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 16 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 15,078,188 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தால் ரூபா 3,003,071 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.5 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் 20 கல்வி நிலையங்களில் உயர் கல்வி அமைச்சின் தொலைக்கல்வி கணனி நுழைவு நிலையங்கள் (NODES Access Centers) நடாத்தப்பட்டு வருவதுடன் அந் நிலையங்களுக்காக பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ள கட்டிட இடவசதிகள், மின்சாரம், நீர், பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளுக்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 36,993,600 தொகையை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா பதவியணிக்கு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வழங்கப்படுகையில் உடன்படிக்கையை மீறிய விரிவுரையாளர்கள் மற்றும் 40 உத்தியோகத்தர்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 82,622,135 கூட்டுத்தொகையான பிணை முறிப் பெறுமதியில் 15 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,001,675 தொகையை அறவிடுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பின்வரும் விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இல்லாத காரணத்தால் கணக்காய்வின் போது அக் கொடுக்கல்வாங்கல்கள் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய/ சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | உதவியாகக் கிடைக்கப்பெற்ற – தளபாடங்கள் | 116,887,429 | சொத்துக்கள் சரியாகக் கிடைக்கப்பெற்றமைக்கு மெய்மையாய்வுச் சபை அறிக்கை, பட்டோலைகள் மற்றும் பதிவேடுகள் |
| (ஆ) | கல்வி பதவியணிச் சம்பளம் மற்றும் படிப்பணம் | 376,765,979 | வருகைகளைப் பதிவு செய்யும் பதிவேடு |

**1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 371(ஆ) | (i) | ஆகக் கூடுதலான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதித் தொகை ரூபா 20,000 இற்கு மிகையாக 171 சந்தர்ப்பங்களின் போது ரூபா 13,424,081 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 37 சந்தர்ப்பங்களின் போது ரூபா 75,000 தொகைக்கு மிகையாக ரூபா 7,567,365 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

(ii) குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மதிப்பீட்டின் அடிப்படையில் பணம் வழங்கப்பட்டிராத காரணத்தால் முற்பணத் தொகை எஞ்சியிருத்தல் 20 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனவிதிக்கோவை

(i) III ஆம் அத்தியாயத்தின் 26.17 உப பிரிவு

கொழும்பு பிராந்திய நிலையங்களில் பகல்நேர பாடசாலைகளின் விரிவுரைகளுக்காக வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு

பல்கலைக்கழக சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்ய வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினரின் வருகையும் வெளிச்செல்லலும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2000 சனவரி 19 ஆம் திகதிய 380 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை

ஆலோசனை மற்றும் வெளி வள நிலைய அங்கீகாரத்தின் கீழ் நடாத்தப்பட்ட 4 நீண்டகாலப் பாடநெறிகளுக்கான வருமான மிகையான ரூபா 5,519,736 தொகை மீளாய்வாண்டின் போது பிழையாக பல்வேறு நிதியங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது

கட்டுப்பாட்டுச் சபையால் பல்கலைக்கழக பீடங்கள் மற்றும் பிராந்திய நிலையங்களின் செயலாற்றலின்

| | |
|---|---|
| முயற்சிகள் சுற்றறிக்கை | பிரகாரம் ஊக்குவிப்பு பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு 2012 நிதிக்கூற்றுக்களின் செயற்பாட்டு விளைவின் ரூபா 50,067,844 தொகையான பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் ரூபா 7,986,409 தொகையான ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) 2011 ஒக்டோபர் 06 ஆம் திகதிய வீவீ/2011/வீசீ/01 ஆம் இலக்க திறந்த பல்கலைக்கழகத்தின் உள்ளகச் சுற்றறிக்கை | கல்வி நிலையங்களின் தொலைபேசி, மின்சாரம், நீர் மற்றும் நாளாந்த ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு முற்பணத் தொகை வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கல்வி நிலையங்களின் செயற்பாட்டின் பிரகாரம் நிதித் தேவைப்பாட்டைக் கருத்திற்கொள்ளாது 10 நிலையங்களுக்காக ரூபா 50,000 படி ரூபா 500,000 வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 06 நிலையங்களின் ரூபா 300,000 தொகை செயற்பாடற்றுக் காணப்பட்டது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு விளைவு அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுக்க முன்னர் ரூபா 713,167,844 பற்றாக்குறையாக இருந்ததுடன், இதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 1,068,810,727 தொகையான மிகையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவிற்காக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 663,100,000 தொகையான மானியம் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா 50,067,844 வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 628,386,000 தொகையான அரசாங்க மானியமும் கடந்த காலப்பகுதிக்கான மூலதன மானியத்திற்கான காலக்கழிவும் 2011 ஆம் ஆண்டிற்கான வருமானமாக

இனங்காணப்பட்டமையால் அவ்வாண்டின் மிகை ரூபா 1,697,196,727 வரை அதிகரித்திருந்தது.

இதன் பிரகாரம், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 1,747,264,571 தொகையான குறைவிற்கு மாணவர் வருமானமும் விண்ணப்பப்படிவ விற்பனை வருமானமும் ரூபா 206,309,920 தொகையான குறைவும் நன்கொடை மற்றும் மூலதன மானியத்திற்கான காலக்கழிவு ரூபா 1,592,996,579 ஆல் குறைவடைந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் 2011 – 2016 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், பாடநெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் 45 நாட்களுக்குள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2011/ 2012 ஆம் ஆண்டுகளின் போது 60 பாடநெறிகளுக்காக நடாத்தப்பட்ட 76 பரீட்சைச் சந்தர்ப்பங்களில் 19 சந்தர்ப்பங்களின் போது பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு 180 நாட்களுக்கு (06 மாதங்களுக்கு) மேலான காலம் கடந்திருந்ததுடன் இவற்றில் 06 சந்தர்ப்பங்களின் போது பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு 365 நாட்களுக்கு (ஒரு வருடத்திற்கு) மேலான காலம் கடந்திருந்தது. 2011 ஆம் ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட 03 சந்தர்ப்பங்களுக்கு உரித்தா பெறுபேறுகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பரீட்சைகள் நடாத்தப்படுவது தாமதமடைந்தமையாலும் பெறுபேறுகள் வெளியாவது தாமதமடைந்தமையின் காரணமாக அடுத்த கட்டத்திற்கான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக அதன் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் பரீட்சைகள் நடாத்தப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம்

எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை இலக்கிடப்பட்ட காலப்பகுதியில் பூர்த்திசெய்ய முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

முகாமைத்துவ தகவல் முறைமைத் தயாரிப்பு 03 சேவை வழங்கும் நிறுவகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் பூர்த்தியானதை அடுத்து முகாமைத்துவ தகவல் முறைமை திறந்த பல்கலைக்கழக தகவல் தொழிநுட்பத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அத் திணைக்களத்தின் மூலம் சேவை வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது கணக்குப் பிரிவிற்குரிய செயற்பாடுகளுக்காக மாத்திரம் தனியார் நிறுவகங்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு ரூபா 2.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**3.3 செயற்பாட்டு திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் மூலம் பயன்படுத்தப்படும் காணிகளில் நாவல வளவின் காணியின் அளவு பல்வேறு பதிவேடுகளில் அதாவது காணி உறுதி, அளவீட்டுத் திட்டம், நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிர்வாகப் பிரிவில் உள்ள காணிப் பதிவேட்டில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட காணி அளவுகள் காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும் நாவல வளவின் காணியில் கொழும்பு வெள்ளக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டின் போது இழப்பீடு வழங்கப்பட்டு 166.81 பேர்ச் கையேற்கப்பட்டிருந்த போதிலும் உரிய வேறுபாடுகள் உள்ளடக்கப்பட்டு காணியின் உறுதியும் அளவீட்டுத் திட்டமும் ஏனைய பதிவேடுகளும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் 12 கல்வி மற்றும் பிராந்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அக் காணிகள் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பண்டாரவளை கல்வி நிலையங்களும் சுற்றுலா விடுதி நிர்மாணிக்கப்பட்டிருந்த 135.21 பேர்ச் காணியும் காணிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருள்மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பதிவாளருக்கு வழங்கப்பட்ட தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 257,687 பெறுமதியான மடிக்கணனி 2010 சனவரி 01 ஆம் திகதி காணாமற் போயிருந்தது. கணனி காணாமற் போனமை தொடர்பாக உயர் கல்வி நிறுவகத்திற்கான தாபனவிதிக்கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் காணாமற்போவது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளப்படாது பதிவழிக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திறந்த பல்கலைக்கழகத்தின் நூலக தகவல்கள் தொழிநுட்ப அபிவிருத்திக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை பல்வேறு சந்தர்ப்பங்களில் ரூபா 7.5 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் இது உரிய செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படாது ரூபா 6 மில்லியன் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் பல்கலைக்கழகத்தின் மூலம் கட்டிடங்களை நிர்மாணித்து பயன்படுத்தப்படுவதுடன் அக் காணியைக் கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பு பல்கலைக்கழக முகாமைத்துவத்திற்குரியது என்ற போதிலும் கல்வி மற்றும் பிராந்திய நிலையங்கள் அமைந்துள்ள காணிகளை பல்கலைக்கழகத்திற்கு மாற்றுவதற்கு பின்பற்றப்பட்டிருந்த நடவடிக்கைகள் திருப்திகரமான நிலையில் இருக்கவில்லை.

## 3.5 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் நிதியத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் பொதி செய்தற் பிரிவிற்காக 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 5,308,800 பெறுமதியான 3 சிறிய பொதியிடல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வியந்திரங்களைச் செயற்படுத்துகையில் கூடிய செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்தமையாலும் வழங்குனரால் 02 மொடியூல்கள் வழங்கப்பட்டிராமையாலும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன.

இம் 03 இயந்திரங்கள் தொடர்பாக அரசாங்க அச்சத்தின் உத்தியோகத்தர் மேற்கொண்ட ஆய்வறிக்கைகளின் பிரகாரம் அச்சகம் மற்றும் பொதியிடல் பிரிவிற்காக இவ்வியந்திரங்கள் தேவையற்றது என்பது உறுதிப்படுத்தப்பட்ட காரணத்தால் செலவிடப்பட்ட ரூபா 5,308,800 தொகை விளைவற்ற கிரயமாக அவதானிக்கப்பட்டது.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திறந்த பல்கலைக்கழகத்தின் 30 ஆவது ஆண்டு விழாவிற்காக விற்பனை செய்யப்படுவதற்காக 2010 ஆம் ஆண்டில் ஒன்று ரூபா 490 படி 2000 கழுத்துப் பட்டிகள் ரூபா 980,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக் கழுத்துப் பட்டிகளில் 27 இலவசமாக வழங்கியமை, 177 விற்பனை செய்யப்பட்டவை உள்ளடங்கலாக 204 கழுத்துப் பட்டிகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மீதி 1796 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் தேவையை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக அவற்றை விற்பனை செய்ய முடியாது களஞ்சியத்தில் காணப்பட்டது.

## 3.7 பதவியணி நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் விபரங்கள் பின்வருமாறாகும்.

| | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| கல்விசார் பதவியணி | 346 | 285 | 61 |
| கல்வி உதவியாளர் பதவியணி | 188 | 155 | 33 |
| நிர்வாக பதவியணி | 87 | 50 | 37 |
| கல்விசாரா பதவியணி | 633 | 511 | 122 |
| | 1,254 | 1,001 | 253 |

இதன் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,254 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 253 பேர் அதாவது 20 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாக நிலவியது. இவ் வெற்றிடங்களில் கல்விசார் பதவியணியில் 18 சதவீதமும் கல்வி உதவியாளர் பதவியணியில் 18 சதவீதமும் நிர்வாகப் பதவியணியில் 43 சதவீதமும் கல்விசாரா பதவியணியில் 19 சதவீதமுமாக துறைரீதியாக பாரிய வெற்றிடங்கள் நிலவின.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்ஆளுகையும்

## 4.1 செயற்பாட்டுத்திட்டம்

2012 செயற்பாட்டுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதாக 231 செயற்பாடுகள் விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பல்கலைக்கழகம் 2012 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையை தயாரித்திருக்காததுடன் செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதாகக்

காண்பிக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 21 செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் திறந்த பல்கலைக்கழகத்திற்காக 12 விடயங்களின் கீழ் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு விடயமான பிராந்திய நிலையங்களின் கணக்காய்வுச் செயற்பாடுகள் பதவியணியினர் இன்மையால் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போதிய உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்படுவதற்கு தேவையான பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு ஆட்சேர்ப்புத் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டின் 07 வருமான மூலங்களுக்கான மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் 33 சதவீதம் முதல் 1238 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் 19 செலவினத் தலைப்பிற்காக மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 25 சதவீதம் முதல் 202 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டன. உரிய செலவினத்தைக் கருத்திற்கொள்கையில் பாதீட்டுத் தகவல்களும் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பிடுகையில் பல்கலைக்கழகத்தின் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உபவேந்தருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்

(ஆ) நிதியக் கட்டுப்பாடு

(இ) காசு மற்றும் வங்கி நடவடிக்கைகள்

(ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(உ) கல்விசார் பதவியணியின் வருகையும் வெளிச்செல்லலும்